# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:89** **தேதி:-10.01.2016**

**BSNLன் சேவைகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்ற ”ஜாதா”**

அன்பார்ந்த தோழர்களே,

BSNLன் சேவைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் பணியில் ஒரு பகுதியாக தமிழகம் முழுவதும் முக்கியமான இடங்களில் 08.01.2016 அன்று ”ஜாதா” நடத்துமாறு தமிழக FORUM முடிவு செய்திருந்தது. தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இந்த ஜாதா நடைபெற்று உள்ளது.

## கோவை

FORUM அமைப்பின் தாரக மந்திரமான SERVICE WITH A SMILE " புன்னகையுடன் சேவை" என்பதை பொது மக்களுக்கு வெளிப்படுத்தும் ஜாதாவின் துவக்க நிகழ்ச்சி கோவை ரேஸ்கோர்ஸ் தொலைபேசி நிலையத்தில் FORUM தலைவர் தோழர் எல்.சுப்பராயன் தலைமையில் நடந்தது. கன்வீனர் தோழர் சி.ராஜேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். நிர்வாகத் தரப்பில் முதன்மைப் பொது மேலாளர் திரு சிவராஜ், திரு.ரத்தினசாமி DGM(ADMN) மற்றும் தோழர்கள் V.வெங்கட்ராமன், மாரிமுத்து BSNLEU, ராமகிருஷ்னன், ராபர்ட்ஸ் NFTE-BSNL, சௌந்திரராஜன் FNTO, அன்புதாஸ் ATP உள்ளிட்ட அனைத்து சங்க தலைவர்களும் உரையாற்றினர். கோவை மாவட்ட முதன்மைப் பொது மேலாளர் திரு சிவராஜ் சிறப்புரை ஆற்றி கொடி அசைத்து பேரணியை துவக்கி வைத்தார். SNEA சங்க மாநிலச் செயலர் தோழர் ராஜசேகர் சிறப்புரை நிகழ்த்தினார். பேரணியின் முடிவில் LIC ஊழியர் சங்கத்தின் நிர்வாகி தோழியர் எம்.கிரிஜா அவர்கள் வாழ்த்தி பேசினார். SNEA சங்க மாவட்டச் செயலர் தோழர் பிரசன்னன் நன்றியுரை ஆற்றினார். பேரணியில் அதிகாரிகள், ஊழியர்கள் உள்ளிட்ட 350க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இங்கு நடைபெற்ற ஜாதா மக்கள் மத்தியில் BSNLன் சேவைகள் மக்கள் மத்தியில் கொண்டு செல்ல மிகப்பெரிய அளவில் பயன் அளித்தது. ஊழியர்கள் மத்தியிலும் உற்சாகம் கரை புரண்டது.

## புதுச்சேரி

அதேபோல் புதுச்சேரியிலும் 09.01.2016 அன்று ஜாதா நடைபெற்றது. BSNL ஊழியர்கள் சங்கம், NFTE(BSNL), SNEA ஒப்பந்த ஊழியர்கள் சங்கங்கள் இணைந்த கூட்டு நடவடிக்கைக் குழு சார்பில் குறைந்த செலவில் தரமான சேவை தரும் BSNL நிறுவனத்தை பாதுகாக்க வேண்டும், பொதுத்துறை நிறுவனமான BSNL, தானே புயல் போன்ற பேரிடர் காலங்களிலும் மக்களுக்கு சிறந்த சேவை புரிந்தது. மத்திய அரசு BSNL நிறுவனத்தை பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி இந்த ஜாதா நடைபெற்றது. BSNL தலைமை அலுவலகத்தில் தொடங்கிய ஜாதா, ரங்கப்பிள்ளை வீதி, நேரு வீதி வழியாக சென்றது. கூட்டு நடவடிக்கைக் குழு நிர்வாகிகள் சுப்பிரமணி, காமராஜ், சங்கரன், செல்வரங்கம், மதுசூதனன், மணிக்கண்ணன், ஆர்.ராஜநாயகம், கொளஞ்சியப்பன், உள்பட திரளான ஊழியர்களும், ஒப்பந்த ஊழியர்களும் கலந்து கொண்டனர். இந்த ஜாதாவில் BSNL நிறுவனத்தை பாதுகாக்க வேண்டும் மற்றும் மக்கள் BSNLன் சேவைகளை முழுமையாக பயன்படுத்தி பயன் பெற வேண்டும் என்பது உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கொண்டு சென்றனர்.

## விருதுநகர்

விருது நகர் மாவட்ட சிவகாசியில் 07.01.2016 அன்று ஜாதா நடைபெற்றது. சிவகாசி தொலைபேசி நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஊழியர்கள் மத்தியில் ஜாதாவின் நோக்கங்களை பற்றி BSNL ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் ரவீந்திரன், மாவட்ட தலைவர் தோழர் சமுத்திரக்கனி மற்றும் AIBDPA சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் M.அய்யாசாமி ஆகியோர் விளக்கி பேசினார்கள். பின்னர் கடைவீதி மற்றும் பேருந்து நிலையம் உள்ளிட்ட பல இடங்களில் 40க்கும் மேற்பட்ட தோழர்கள் BSNLன் சேவைகள் பற்றிய விரிவான சுற்றறிக்கையினை விநியோகித்து மக்களிடம் ஆதரவு திரட்டினார்கள்.

## வேலூர்

வேலூரில் 08.01.2016 அன்று BSNL ஊழியர் சங்கம், SNEA மற்றும் AIBDPA சங்கங்களின் சார்பாக ஜாதா நடைபெற்றது. பொது மேலாளர் அலுவலகம் முன்பு FORUMன் தலைவர் தோழர் S.இளஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்ட ஊழியர்கள் மத்தியில் BSNL ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் தோழர் தங்கவேலு, SNEA மாவட்ட செயலாளர் தோழர் இளஞ்செழியன், AIBDPA மாவட்ட செயலாளர் தோழர் ஜோதி உள்ளிட்ட தலைவர்கள் ஜாதாவின் நோக்கத்தை எடுத்துரைத்தனர். பின்னர் வேலூர் பேருந்து நிலையம், கடைவீதி மற்றும் நகரின் முக்கிய பகுதிகளில் சுமார் 5000 சுற்றறிக்கையினை விநியோகித்து மக்கள் மத்தியில் BSNLன் சேவைகளை விளம்பரப்படுத்தினர்..

இந்த ஜாதா நடைபெற்ற இடங்களில் எல்லாம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. ஊழியர்கள் மத்தியிலும் ஒரு உற்சாகம் ஏற்பட்டுள்ளது. அகில இந்திய அளவில் FORUM எடுக்கும் இது போன்ற நடவடிக்கைகளில் நமது CMD உள்ளிட்ட அதிகாரிகள் மத்தியில் பெரும் வரவேற்பு உள்ளது. தமிழக FORUM சார்பாக 19.01.2016 அன்று பாண்டிச்சேரியில் நடைபெற உள்ள சேவை மேம்பாட்டு கருத்தரங்கத்தில் தமிழக தலைமை பொது மேலாளர் திருமதி N.பூங்குழலி ITS அவர்களும் மற்ற அதிகாரிகளும் கலந்துக் கொள்ள உள்ளனர். ஆனால் ஒரு சில தலமட்ட அதிகாரிகளோ FORUMத்தின் முடிவுகளை அமுலாக்க உதவ மறுக்கிறார்கள். உதாசீனம் செய்கின்றனர். BSNLன் சேவைகளை விரிவாக்கம் செய்ய, நல்ல எண்ணத்தோடு நடைபெறும் இது போன்ற நிகழ்ச்சிகள் அவசியம் என்பதை புரிந்துக் கொண்டு தலமட்ட அதிகாரிகள் செயல்பட வேண்டும். நாம் அனைவரும் ஒன்றாக கரம் கோர்த்து BSNLஐ காத்திடுவோம். மக்களுக்கு சிறந்த சேவை தந்திடுவோம் என உறுதியேற்போம்..

இந்த ஜாதாவை வெற்றிகரமாக நடத்திய கோவை, பாண்டி, விருதுநகர் மற்றும் வேலூர் தோழர்களுக்கு தமிழ் மாநில சங்கம் சார்பாக மனதார பாராட்டுக்களை உரித்தாக்குகிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**